கூட்ட எண் 02
2019 - 2020 -ம் ஆண்டு

நகராட்சி அலுவலகம்,
ஆரணி,
நாள் 26.06.2019.

2019-ம் ஆண்டு ஜீன் மாதம் 26.06.2019 ந்தேதி புதன் கிழமை மாலை 4.00 மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

பொருள்கள்

1. இந்நகராட்சி ஆணையர் அவர்களின் மே 2019 ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

2. இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் மே 2019 ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

3. இந் நகராட்சியில் உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை திருவண்ணாமலை அவர்களின் 2016 - 2017 ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கையில் வருவாய் நிதி பத்தி எண் 40ல் குறிப்பிட்டுள்ளதற்கிணங்க, 2015 - 2016 ஆம் ஆண்டு தணிக்கை பணியாளர்களின் 50% சதவீத ஊதியம் மற்றும் பிற படிகளின் உண்மைச் செலவு தொகை ரூ. 26,880/- என தணிக்கை கட்டணம் குறைவு கணக்கிடப்பட்டுள்ளது. இதனை அரசு நிதியில் உரிய தலைப்பில் செலுத்தப்பட வேண்டும். தணிக்கையாண்டில் இறுதியில் பின்வரும் விவரப்படி நிலுவையாக உள்ள தணிக்கை கட்டணம் குறைவு தொகை ரூ. 26,880/- உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட்டு விவரம் தணிக்கைக்கு காண்பிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மேற்படி 2015 -2016 ஆம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணம் குறைவு தொகை ரூ.26,880/-ஐ உரிய அரசு தலைப்பில் செலுத்த மன்றத்தின் ஒப்புதலுக்கு கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- 1. வருவாய் நிதியிலிருந்து மேற்படி தொகையை செலுத்தலாம். 2. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 3. மேலும், அவசர அவசியம் கருதி மேற்படி தொகையினை உள்ளாட்சி நிதித் தணிக்கை துறைக்கு செலுத்த தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று செலுத்தியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 2706/எப்1/2017)

4. உதவி ஆணையர் தொழிலாளர் வருங்கால சேமநல நிதி அமைப்பு வேலூர் அவர்களின் கடிதத்தில், இந் நகராட்சியில் கடந்த 08.01.2011 முதல் 31.03.2014 வரை உள்ள காலத்தில் நகராட்சியில் ஒப்பந்ததாரர்களால் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு வழங்கப்பட்ட பட்டியலின் அடிப்படையில் தொழிலாளர் வருங்கால சேமநல நிதி அமைப்பிற்கு ரூ. 5,62,662/- தொகையினை வங்கி வரைவோலையாக செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டு வரப் பெற்றுள்ள கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்குறிப்பிட்டுள்ள தொழிலாளர் வருங்கால சேமநல நிதி அமைப்பிற்கு செலுத்த வேண்டிய தொகையினை ஒப்பந்ததாரர்கள் முன்வைப்புத் தொகையிலிருந்து செலுத்த அனுமதிக்கலாம். (கோப்பு எண் 2218/இ1/2012)

5. இந் நகராட்சியின் ஆணையர் அறையில் உள்ள பெயர் பலகையில் ஆணையாளர்கள் பணிபுரிந்த விவரம் மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டம், பொது அறிவிப்பு பலகை இரண்டு இடத்தில் எழுதிக் கொடுக்க அதற்கான தோராய செலவினம் ரூ. 2500/-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம், மேலும், தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

6, ஆரணி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை துணை விதிகள் மக்கும் குப்பை மக்காத குப்பை என தரம் பிரித்து வாங்க பொது மக்களுக்கு விழப்புணர்வு எற்படுத்த நோட்டீஸ் அச்சடிக்க விலைப்புள்ளி கோரியதில் வரப் பெற்ற விலைப்புள்ளிகள் மற்றும் தோராய செலவினம் ரூ 12,000/-க்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. அன்னை கலைக்கூடம், ஆரணி | 20,000 எண்ணிக்கை நோட்டீஸ் அச்சடிக்க | ரூ. 13,000 /- |
| 2. நியு அஜந்தா சைன் | 20,00 எண்ணிக்கை நோட்டீஸ் அச்சடிக்க | ரூ. 12,000 /- |

அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம், குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள நியு அஜந்தா சைன் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 1285/எச்1/2019)

7. இந் நகராட்சியில் அலுவலக பயன்பாட்டில் இருந்து வரும் ஈப்பு வாகனம் எண் TN25AU6961 வருடாந்திர இன்சூரன்ஸ் காலம் 27.06.2019 அன்றுடன் நிறைவடைகிறது. எனவே, 27.06.2019 முதல் 26.06.2020 வரை ஓராண்டு காலத்திற்கு இன்சூரன்ஸ் மீண்டும் தொடர ரூ.15474/- தியுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்தில் செலுத்த மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி நிறுவனத்திற்கு இன்சூரன்ஸ் தொகை செலுத்தியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 634/இ1/2016)

8. ஆரணி நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள அலுவலக பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டு வரும் 45KVA ஜெனரேட்டர் கடந்த 28.05.2019 அன்று பெய்த காற்று மழையின் காரணமாக அலுவலக வளாகத்தில் உள்ள மின்வாரியத்திற்கு சொந்தமான டிரான்ஸ்பார்ம் மீது இடிமின்னல் தாக்கியதில், நகராட்சி அலுவலகத்தில் உள்ள ஜெனரேட்டர் பேனல் போர்டு மற்றும் ஜெனரேட்டர் இதர பாகங்கள் எரிந்து விட்டது. இதனால் ஜெனரேட்டரை முழுவதுமாக இயக்க முடியவில்லை. எனவே, மேற்குறிப்பிட்டுள்ள ஜெனரேட்டர் பழுது சரி செய்யும் டீலர் நிறுவனத்திடம் விலைப்புள்ளி கோரப்பட்டதில், ஜெனரேட்டர் நேரில் ஆய்வு செய்து அதனை சரி செய்ய உத்தேச தோராய செலவினம் ரூ. 57000/- ஆகும் என தெரிவிக்கப்பட்டு வரப் பெற்ற விலைப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கும் செலவினத்திற்கும் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்படி செலவினம் நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். மேலும், அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 773/இ1/2019)

9. இந் நகராட்சியின் 2018- 2019 ஆம் நிதியாண்டு தணிக்கை நடைபெறுவதால், தணிக்கைக்கு உட்படுத்த 33 வார்டுகளின் DCB பதிவேடுகள் பைண்டிங் செய்ய தோராய செலவினம் ரூ.3000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதி வழங்கலாம். (கோப்பு எண் /அ1/ )

10. நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து வரப்பெற்றுள்ள கடிதம் ந.க.எண் 48800/2006/எல் நாள் 20.06.2019ல், தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணி என்ற பணியமைப்பின் கீழ் புதிய பணியிடங்களை உருவாக்குவது தொடர்பாகவும், அதற்கு ஈடாக சில பணியிடங்களை திரும்ப ஒப்படைப்பது தொடர்பாகவும் விபரங்கள் தரப்பட்டுள்ளன.

1) நகராட்சிகளின் கணக்குகளை இன்றைய தேவைக்கேற்ப பராமரிக்கவும், நிதி மேலாண்மையை திறம்படுத்தவும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணி என்ற பணியமைப்பு உருவாக்கப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சரவர்கள் 01.04.2013 அன்று சட்ட மன்றத்தில் அறிவித்தார் என்றும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணி உருவாக்குவதற்கான தீர்மானங்களை அனைத்து நகராட்சிகளும் நிறைவேற்றி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைத்துள்ளன என்றும் அத்தீர்மானங்கள் 13.06.2013 அன்று அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டன என்றும், இதனடிப்படையில அரசாணை (எம்.எஸ்) எண் 26, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (எம்இ1) நாள் 10.02.2016ல் தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணியமைப்பிற்கான பணி விதிகள் (TAMIL NADU MUNICIPAL ACCOUNTS SERVICE RULES) 2016 உருவாக்கப்பட்டு 11.02.2016 அன்று அரசு கெஜட்டில் வெளியிடப்பட்டது என்றும், நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து வரப் பெற்றுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2) மேலும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணியமைப்பின் கீழ் பணியிடங்களை புதிதாக உருவாக்க ஏதுவாக செம்பாக்கம், வாலாஜாப்பேட்டை, வந்தவாசி மற்றும் கீழக்கரை நகராட்சிகள் தவிர அனைத்து நகராட்சிகளும் தலா ஒரு இளநிலை உதவியாளர் பணியிடத்தை திரும்ப ஒப்படைத்து (SURRENDER) தீர்மானம் நிறைவேற்றி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைத்தன என்றும் அத்தீர்மானங்கள் 07.07.2017 அன்று அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டன என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) தற்போது தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணியின் (TAMIL NADU MUNICIPAL ACCOUNTS SERVICE) கீழ் முதல் நிலை நகராட்சிகளுக்கு ஒவ்வொரு நகராட்சிக்கும் கீழ்கண்டவாறு புதிய பணியிடங்கள் உருவாக்கிட திருத்திய கருத்துரு அரசுக்கு 03.01.2019 அன்று அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| முதல் நிலை கணக்கர் | SENIOR ACCOUNTANT | 1 |
| கணக்கு உதவியாளர் | ACCOUNTS ASSISTANT | 1 |

மேற்கண்டவாறு TAMIL NADU MUNICIPAL ACCOUNTS SERVICE பணியமைப்பில் கணக்குப் பணிக்கான பிரத்யேக பணியிடங்களை உருவாக்குவதற்கு ஈடாக ஏற்கனவே தமிழ்நாடு நகராட்சி பொதுப் பணியில் (TAMIL NADU MUNICIPAL GENERAL SERVICE) கணக்குப்பணி தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள பணியிடம் / பணியிடங்களையோ அல்லது வேறு பணியிடத்தையோ ஒவ்வொரு நகராட்சியும் கூடுதல் சம்பள செலவினை தவிர்க்கும் பொருட்டு திரும்ப ஒப்படைக்க வேண்டியுள்ளது என்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார். இந்நகராட்சிகளில் கீழ்காணும் பணியிடத்தினை திரும்ப ஒப்படைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

இளநிலை உதவியாளர் பணியிடங்கள் இரண்டு
அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதி வழங்கலாம். (கோப்பு எண் 1260/2017/சி1)

11. இந் நகராட்சிக்கு சொந்தமான வண்டிமேடு செல்லும் வழியில் தரை தளத்தில் 10 கடைகள் மற்றும் முதல் தளத்தில் வணிக உபயோகமாக பயன்படுத்திக் கொள்ள 1 கடை ஆகிய இனங்களுக்கு முன் ஏலம் பெறப்படும் பொறுப்பு தொகையில் கட்டடம் கட்டி குத்தகை உரிமம் பெற மேற்படி குத்தகை இனங்களை ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு அனுபவிக்கும் உரிமைக்கு மன்ற அனுமதி பெற்று கடந்த 25.01.2019 அன்று ஏலம் கோரப்பட்டதில், மேற்படி, தரை தளத்தில் 10 கடைகளில் 8 கடைகள் மட்டும் ஏலம் எடுக்கப்பட்டது. மீதமுள்ள 2 கடைகளுக்கு வருவாய் ஆய்வாளரின் குறிப்பின்படி மறு ஏலம் கோர மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண் | ஏல விவரம் | ஏலப் பொறுப்பு தொகை ரூ. (ஒரு கடைக்கு) | சொத்து சான்றிதழ்.ரூ (01.01.2018க்கு பிறகு பெறப்பட்டிருக்க வேண்டும்) | தாசில் தாரிடமிருந்து சால்வன்சி பெறாதவர்கள் செலுத்த வேண்டிய பொறுப்புத் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சிக்கு சொந்தமான வண்டிமேடு கடைகள் தரை தளத்தில் கடை எண்கள் 7 மற்றும் 8 (ஒரு கடையின் அளவு 10 X 9) | 300000 | 500000 | 500000 |

அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி கடைகளுக்கு முன் ஏலம் கோரவும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
(கோப்பு எண் 987/அ3/2018)

12. இந் நகராட்சிக்கு சொந்தமான காய்கறி மார்கெட் கடைகளின் கூறைகள் 01.06.2018 அன்று அதிகாலை இடிந்து விழுந்து அவ்விடத்தினை மாண்புமிகு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் அவர்களும், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர், மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களும் நேரில் பார்வையிட்டு பொது மக்களுக்கு அசாம்பாவிதம் ஏற்படா வண்ணம் அனைத்து வழிகளும் மூடப்பட வேண்டும் என உத்தரவிட்டதின்பேரில், புதிய பேருந்து நிலையத்திலிருந்து மார்கெட் உள் செல்லும் வழிகள் மூடப்பட்டது. இந் நகராட்சியின் வருவாய் ஆய்வாளரின் குறிப்பில் (நாள் 03.06.2019) மேற்படி காய்கறி மார்கெட் உள் செல்லும் இரண்டு வழிகள் மற்றும் பழைய மார்கெட் கட்டடம் முன்புறம் கடை எண் 22-ற்கும் கடை எண் 23-ற்கும் இடையில் உள்ள வழியிலும், தற்போது சமுக விரோத செயல்கள் நடைபெறுவதோடு அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு தனியார் காய்கறி கடை நடத்தி வருகின்றனர். இதனை தடுக்கும் வகையிலும் நகராட்சிக்கு வருவாய் வர்த்தக வகையிலும் புதிய பேருந்து நிலையத்திலிருந்து காய்கறி உள் செல்லும் இரண்டு வழிகளில் சுவர் எழுப்பி இரண்டு கடைகள் மற்றும் பழைய மார்கெட் கட்டடம் முன்புற வழியில் சுவர் எழுப்பி இரண்டு கடைகள் ஆக மொத்தம் நான்கு கடைகளுக்கும் முன் ஏலம் கோரி அதன் மூலம் பெறப்படும் பொறுப்புத் தொகையில் கட்டடம் கட்டி மேறபடி குத்தகை ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு அனுபவிக்கும் உரிமைக்கு குத்தகை விடலாம் என தெரிவித்துள்ளார். மேற்படி குறிப்பின்படி, தொடர் நடவடிக்கை மேற்கொண்டு நான்கு கடைகளையும் முன் ஏலம் விட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- 1. மன்றம் அனுமதிக்கலாம். 2. மேற்படி கடைகளுக்கு முன் ஏலம கோரியும், தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 1441/அ3/2019)

13. ஆரணி நகராட்சியில் வருவாய் நிதி, குடிநீர் நிதி மற்றும் கல்வி நிதி 2019 - 2020ம் ஆண்டிற்கான பின்வரும் பணி மேற்கொள்ள 26.06.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் **வருவாய் நிதி** | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | ஒப்பந்ததாரர் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி அலுவலகம் முழுவதும் மின்வயர்கள் புதியதாக மாற்றி அமைத்தல் மற்றும் குளிர்சாதன பெட்டிகள் பழுது சரி செய்தல் | 2.25 | சக்தி கன்ஸ்ரக்ட்சன்ஸ், திண்டிவனம் எஸ்.உஷாராணி | 0.03 % குறைவு<br>0.50 % அதிகம் |
| 2 | ஆரணி கோட்டை மைதானத்தை சுற்றியுள்ள மின்விளக்குகள் UG CABLW ஒயர்கள் மாற்றி அமைத்தல் | 0.75 | பத்ரா கன்ஸ்ட்ரக்ஷன், சென்னை-101 பிரதீபா எண்டர்பிரைசஸ், சென்னை - 101 | 0.08 % குறைவு<br>0.30 % அதிகம் |
| 3 | ஆரணி நகராட்சி தெருவிளக்கு பராமரிப்பிற்கு தேவையான சோடியம் மின்விளக்குகள் மற்றும் மின்உபகரணங்கள் விநியோகம் செய்தல் | 1.50 | சக்தி கன்ஸ்ரக்ட்சன்ஸ், திண்டிவனம் எஸ்.உஷாராணி | 0.05 % குறைவு<br>0.60 % அதிகம் |
| 4 | ஆரணி நகராட்சி காந்தி ரோடு சென்டர் மீடியா மின்விளக்குகள் பழுது சரி செய்தல் | 1.50 | சக்தி கன்ஸ்ரக்ட்சன்ஸ், திண்டிவனம் எஸ்.உஷாராணி | 0.02 % குறைவு<br>0.70 % அதிகம் |
| 5 | ஆரணி நகராட்சி காந்தி ரோடு சென்டர் மீடியா மின்விளக்கு கேபிள் ஒயர்கள் புதியதாக மாற்றி அமைத்தல் | 3.50 | High-tech Tronics Chennai - 33<br>Sri Balaji Electricals Chennai -17 | 0.03% குறைவு<br>0.20%. அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | ஆரணி நகராட்சி காந்தி ரோடு சென்டர் மீடியா சவரின் இடைவெளி நடுவே தடுப்பு சுவர் அமைத்தல் | 1.00 | இ.இளங்கோவன்<br>ஆர். கந்தன் | 0.09% குறைவு<br>0.50%. அதிகம் |
| 7 | **குடிநீர் நிதி** ஆரணி நகராட்சி பகுதிகளில் குடிநீர் விநியோக வால்வுகளுக்கு புதியதாக CHAMBER அமைத்தல் | 6.00 | இ.இளங்கோவன்<br>ஆர். கந்தன் | 0.07% குறைவு<br>0.10%. அதிகம் |
| 8 | **கல்வி நிதி** ஆரணி நகராட்சிக்கு சொந்தமான பழனி ஆண்டவர் கோயில் தெரு நகராட்சி பள்ளியில் மாணவர்கள் கல்வித் திறன் மேம்படுத்த ஸ்மார்ட் கிளாஸ்ரூம் அமைக்கும் பணி | 9.90 | TREASURE ENVISION, MADURAI - 20<br>JMD SOLUTION, MADURAI -9 | 0.08% குறைவு<br>0.35%. அதிகம் |
| 9 | ஆரணி நகராட்சிக்கு சொந்தமான சைதை அனந்தபுரம் நகராட்சி பள்ளியில் மாணவர்கள் கல்வித் திறன் மேம்படுத்த ஸ்மார்ட் கிளாஸ்ரூம் அமைக்கும் பணி | 9.90 | TREASURE ENVISION, MADURAI - 20<br>JMD SOLUTION, MADURAI -9 | 0.14% குறைவு<br>0.02%. அதிகம் |
| 10 | வார்டு எண் 24ல் என்.எஸ். நகரில் உள்ள அங்கன்வாடி குழந்தைகள் நல மையக் கட்டடத்திற்கு தண்ணீர் வசதிகள் மற்றும் இதர பணிகள் செய்தல் | 0.75 | இ.இளங்கோவன்<br>ஆர். கந்தன் | 0.05% குறைவு<br>0.20%. அதிகம் |

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர்களுக்கு பணிஆணை வழங்க மன்றம் அனுமதிகலாம்.
(கோப்பு எண் 765/இ1/2019)

14. மாவட்ட ஆட்சித் தலைவர் திருவண்ணாமலை அவர்களின் அறிவுரைக்கிணங்க, ஆரணி நகராட்சிக்கு சொந்தமான தச்சூர் ரோடு நகராட்சி பள்ளி, மருசூரான் தெரு நகராட்சி பள்ளி மற்றும் பழனி ஆண்டவர் கோயில் தெரு நகராட்சி பள்ளி ஆகிய பள்ளிகளில் மழைநீர் கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ. 3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்காலம். மேலும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.(கோப்பு எண் 765/19/இ1)

15. மாவட்ட ஆட்சித் தலைவர் திருவண்ணாமலை அவர்களின் அறிவுரைக்கிணங்க, ஆரணி நகராட்சிக்கு சொந்தமான ஆரணிப்பாளையம் தருமராஜா கோயில் தெரு நகராட்சி பள்ளி, சார்பனார் பேட்டை நகராட்சி நடுநிலைப்பள்ளி, சபியுல்லா தெருவில் உள்ள அம்சவேணி நகராட்சி நடுநிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் மழைநீர் கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ. 2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்காலம். மேலும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.(கோப்பு எண் 765/19/இ1)

16. மாவட்ட ஆட்சித் தலைவர் திருவண்ணாமலை அவர்களின் அறிவுரைக்கிணங்க, ஆரணி நகராட்சிக்கு சொந்தமான அலுவலக கட்டடம், மற்றும் கமண்டல நாகநதி தலைமை நீரேற்று நிலையம் ஆகிய இடங்களில் மழைநீர் கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ. 1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்காலம். மேலும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.(கோப்பு எண் 765/19/இ1)

17. மாவட்ட ஆட்சித் தலைவர் திருவண்ணாமலை அவர்களின் அறிவுரைக்கிணங்க, ஆரணி நகராட்சிக்கு சொந்தமான கண்ணப்பன் தெரு நகராட்சி பள்ளி, பாலாஜி நகர் நகராட்சி பள்ளி மற்றும் அனந்தபுரம் தெரு நகராட்சி பள்ளி ஆகிய பள்ளிகளில் மழைநீர் கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ. 3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்காலம். மேலும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.(கோப்பு எண் 765/19/இ1)

18. ஆரணி நகராட்சி பகுதியில் அண்மையில் பெய்த காற்றுடன் கூடிய மழை பொழிவின் காரணமாக நகராட்சி பல்வேறு பகுதிகளில் பொது மக்களின் நலனுக்காக அமைக்கப்பட்டுள்ள உயர்கோபுர மின்விளக்குகள் பழுது ஏற்பட்டு ஒளிராமல் உள்ளது. எனவே, மேற்குறிப்பிட்டுள்ள உயர்கோபுர மின்விளக்குகளை ஒளிர செய்யவும், எதிர்வரும் மூன்று மாதங்களுக்கு பராமரிப்பு பணிகள் செய்திடவும் ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ. 4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்காலம். மேலும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.(கோப்பு எண் 765/19/இ1)

19. ஆரணி நகராட்சிக்கு சொந்தமான கண்ணப்பன் தெரு நகராட்சி உயர்நிலைப்பள்ளியில் மாணவ மாணவியர் மற்றும் ஆசிரியர் ஆகியோர் பயன்பாட்டில் உள்ள கழிவறையின் கழிவுநீர் வெளியேறும் பைப் சேதமடைந்து அடைப்பு ஏற்பட்டு கழிவுநிர் வெளியேறாமல் உள்ளது. மாணவ மாணவியர் மற்றும் ஆசிரியர் ஆகியோர் நலன் கருதி அதனை செப்பனிட்டு புதியதாக அமைத்திட ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ.0.50 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்காலம். மேலும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.(கோப்பு எண் 765/19/இ1)

20. மாவட்ட ஆட்சித் தலைவர் திருவண்ணாமலை அவர்களின் அறிவுரைக்கிணங்க, பசுமை புரட்சி திட்டத்தின் கீழ் ஆரணி நகராட்சி பராமரிப்பில் உள்ள பின்வரும் வெங்கட்ராமன் பூங்கா, காந்தி நகர் பூங்கா, சபாஷ்கான் தெரு பூங்கா, பாலாஜி நகர் பூங்கா, ஜெயலட்சுமி நகர் பூங்கா, வி.ஏ.கே. நகர் பூங்கா ஆகிய பூங்காக்களில் மரக்கன்றுகள் அமைத்து குடிநீர் ஆதாரங்களை பெருக்கிட ஆகும் உத்தேச தோராய செலவனம் ரூ.0.50 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்காலம். மேலும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.(கோப்பு எண் 765/19/இ1)

21. ஆரணி நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண் 28 அனந்தபுரம் தெருவில் உள்ள நகராட்சி ஆரம்ப பள்ளிக் கட்டடத்தின் மேற்கூறை, சாய்தளம் மற்றும் முகப்பு கேட் ஆகியவை பழுதடைந்துள்ளதால், எதிர்வரும் மழைகாலத்தினை கருத்தில் கொண்டு மாணவ மாணவியர் மற்றும் ஆசிரியர்கள் நலனை கருதி மேற்குறிப்பிட்ட பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச தோராய செலவனம் ரூ.2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்காலம். மேலும், மேற்படி செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.(கோப்பு எண் 765/19/இ1)

22. ஆரணி நகராட்சிக்கு சொந்தமான சித்தா மருத்துவமனையில் புதியதாக இன்வெட்டர் மற்றும் பேட்டரி பொருத்திடவும், மருத்துவமனை இருபுறங்களிலும் தரைதளம் மிகவும் பழுதடைந்துள்ளதை அகற்றி புதியதாக தரைதளம் அமைத்து இதர பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ.1.50இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்காலம். மேலும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.(கோப்பு எண் 765/19/இ1)

23. ஆரணி நகராட்சி வார்டு எண் 09ல் சபியுல்லா தெருவில் அமைந்துள்ள அங்கன்வாடி குழந்தைகள் மையத்தின் மேற்கூறை சேதமடைந்துள்ளது. இதனை செப்பனிட்டு பராமரிப்பு பணிகள் செய்திட ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

.அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்காலம். மேலும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.(கோப்பு எண் 765/19/இ1)

**24. ஆரணி நகராட்சியில் வறட்சி நிவாரணப் பணிகள் 2019ன் கீழ் பின்வரும் பணி மேற்கொள்ள 07.06.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.**

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | ஒப்பந்ததாரர் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்தப் புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1 | ஆரணி நகராட்சிக்கு சொந்தமான தச்சூர் ஆற்றுப்படுகை மற்றும் வார்டு எண் 11 பாட்சா தெரு, வார்டு எண் 12 செல்வ விநாயகர் கோயில் தெரு, மற்றும் வார்டு எண் 27 முள்ளிப்பட்டு MGR நகர் ஆகிய பகுதிகளில் புதியதாக ஆழ்துளை குழாய் கிணற்றுடன் கூடிய மின்விசை பம்பு அமைக்கும் பணி | 14.50 | M/s பத்ரா கன்ஸ்ட்ரக்ஷன், சென்னை - 101<br><br>M/s பிரதீபாஎண்டர்பிரைசஸ், சென்னை -101 | 4.95 % அதிகம்<br><br>5.65 %.அதிகம் |
| 2 | ஆரணி நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண் 10 அருணாசல ஈஸ்வரன் கோயில் தெரு, திருவள்ளுவர் தெரு, மற்றும் நேரு நகர் ஆகிய பகுதிகளில் புதியதாக ஆழ்துளை குழாய் கிணற்றுடன் கூடிய மின்விசை பம்பு அமைக்கும் பணி | 5.00 | M/s சக்தி கன்ஸட்ரக்ஷன் திண்டிவனம்<br><br>எஸ். உஷாராணி ஆரணி. | 4.97 % அதிகம்<br><br>6.30 %.அதிகம் |
| 3 | ஆரணி நகராட்சி வார்டு எண் 5 ஆண்டாள் சன்னதி தெரு, வார்டு எண் 17 கோபால் தெரு, வார்டு எண் 26 நாடகசாலை பேட்டை தெரு, வார்டு எண் 29 காந்தி நகர் முதல் தெரு, வார்டு எண் 30 ஜெயலட்சுமி நகர், வார்டு எண் 31 கோட்டை மேற்கு தெரு வார்டு எண் 28 அனந்தபுரம் தெரு, வார்டு எண் 20 சூரியகுளம் தெற்கு தெரு, ஆகிய பகுதிகளில் புதியதாக ஆழ்துளை குழாய் கிணற்றுடன் கூடிய மின்விசை பம்பு அமைக்கும் பணி | 14.50 | M/s பத்ரா கன்ஸ்ட்ரக்ஷன், சென்னை - 101<br><br>M/s பிரதீபாஎண்டர்பிரைசஸ், சென்னை -101 | 4.96 % அதிகம்<br><br>6.95 %.அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | ஆரணி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 21 பாதர் சுபேதார் தெரு மற்றும் மாரியம்மன் கோயில் தெரு, வார்டு எண் 23 சுப்பிரமணிய சாமி கோயில் தெரு, வார்டு எண் 14 சபாஷ்கான் தெரு, வார்டு எண் 16 வேதபுரீஈஸ்வரன் கோயில் தெரு, வார்டு எண்22 முனுசாமி தெரு, வார்டு எண் 13 CPM தெரு, வார்டு எண் 17 தருமராஜா கோயில் தெரு ஆகிய இடங்களில் புதியதாக ஆழ்துளை குழாய் கிணற்றுடன் கூடிய மின்விசை பம்பு அமைக்கும் பணி | 11.00 | M/s பத்ரா கன்ஸ்ட்ரக்ஷன், சென்னை - 101<br>M/s பிரதீபாஎண்டர்பிரைசஸ் சென்னை -101 | 4.93 % அதிகம்<br>5.37 %.அதிகம் |
| 5 | ஆரணி நகராட்சிக்குட்பட்ட கமண்டல நாகநதியில் மற்றும் தரைப்பாலம் பகுதியில், வார்டு எண் 14 கண்ணகி நகர், வார்டு எண் 22 சாமி தெரு, வார்டு எண் 16 திருப்பூர் குமரன் தெரு, வார்டு எண் 10 முருகப்பன் தெரு, வார்டு எண் 19 வடியராஜா தெரு மற்றும் சின்னசாயக்காரத் தெரு, ஆகிய இடங்களில் புதியதாக ஆழ்துளை குழாய் கிணற்றுடன் கூடிய மின்விசை பம்பு அமைக்கும் பணி | 15.00 | M/s பத்ரா கன்ஸ்ட்ரக்ஷன், சென்னை - 101<br>M/s பிரதீபாஎண்டர்பிரைசஸ், சென்னை -101 | 4.96 % அதிகம்<br>5.72 %.அதிகம் |
| 6 | ஆரணி நகராட்சி பகுதியில் உள்ள ஆழ்துளை குழாய் கிணறுகள் 10 எண்ணிக்கை (FLUSING) செய்து சுத்தம் செய்தல், | 2.00 | M/s பத்ரா கன்ஸ்ட்ரக்ஷன், சென்னை - 101<br>M/s பிரதீபாஎண்டர்பிரைசஸ், சென்னை -101 | 4.97 % அதிகம்<br>6.70 %.அதிகம் |
| 7 | ஆரணி நகராட்சிக்கு சொந்தமான தச்சூர் தலைமை நீரேற்று நிலையம் (செய்யாறு ஆற்றுப்படுகை) மற்றும் கமண்டல நாகநதி தலைமை நீரேற்று நிலைய நீர் உறிஞ்சு கிணறுகள் புனரமைக்கும் பணிகள் | 12.00 | M/s பத்ரா கன்ஸ்ட்ரக்ஷன், சென்னை - 101<br>M/s பிரதீபாஎண்டர்பிரைசஸ், சென்னை -101 | 4.92 % அதிகம்<br>5.76 %. அதிகம் |
| 8 | ஆரணி நகராட்சி பகுதிகளில் லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் | 15.00 | M/s பத்ரா கன்ஸ்ட்ரக்ஷன், சென்னை - 101<br>M/s பிரதீபாஎண்டர்பிரைசஸ், சென்னை -101 | 2.04 % குறைவு<br>6.12 %.அதிகம் |
| 9 | குடிநீர் விநியோக பணிக்கு தேவையான குடிநீர் சேமிக்கும் HDPE தொட்டிகள் விநியோகம் செய்தல் | 4.00 | M/s பத்ரா கன்ஸ்ட்ரக்ஷன், சென்னை - 101<br>M/s பிரதீபாஎண்டர்பிரைசஸ், சென்னை -101 | 4.96 % அதிகம்<br>8.36 %.அதிகம் |
| 10 | ஆழ்துளை கிணறுகளில் உள்ள சிறுமின்விசை பம்புகள் மற்றும் மின்விசை பம்புகள் 20 எண்ணிக்கை பழுது சரி செய்து மாற்றி அமைத்தல் | 7.60 | M/s பத்ரா கன்ஸ்ட்ரக்ஷன், சென்னை - 101<br>M/s பிரதீபாஎண்டர்பிரைசஸ், சென்னை -101 | 4.95 %அதிகம்<br>5.67 %.அதிகம் |
| 11 | ஆரணி நகராட்சி பகுதிகளில் உள்ள 5 எண்ணிக்கை கைபம்பினை சிறுமின்விசை பம்பாக மாற்றி அமைத்தல் | 5.00 | M/s பத்ரா கன்ஸ்ட்ரக்ஷன், சென்னை - 101<br>M/s பிரதீபாஎண்டர்பிரைசஸ், சென்னை -101 | 4.97 %அதிகம்<br>5.83 %.அதிகம் |

அலுவலக குறிப்பு :- மேற்கண்ட பணிகளுகளில் வரிசை எண் 08 தவிர மற்ற பணிகளான 1 முதல் & 7.9.10.11 ஆகிய விலைவிகிதம் வழங்கியுள்ள அனைவருமே அந்தந்த பணிக்கான மதிப்பீட்டு தொகையை விட கூடுதலான விழுக்காட்டிற்குத்தான் விலைவிகிதம் அளித்துள்ளனர். இருப்பினும், இத்திட்டம் வறட்சி நிவாரண திட்டப் பணியாதலினாலும், பொது மக்களின் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்யவும், பணிகளை விரைந்து முடிக்க வேண்டிய கட்டாயத்தினாலும், முதல் அழைப்பு என்ற போதிலும் சிறப்பினமாக கருதி மேற்படி பணிகளுக்கான மதிப்பீட்டு தொகைக்கு கூடுதலாக 05% விழுக்காட்டிற்கு குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளியினை ஏற்கலாம், மேலும், மேற்படி பணிகளுக்கான ஏற்படும் கூடுதல் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும், மன்றம் அனுமதிக்கலாம். பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 1135/இ1/2019)

25. ஆரணி நகராட்சிக்குட்பட்ட சூரியகுளம் தென்கிழக்கு மூளையில் உள்ள சுற்றுச் சுவர் சிதலமடைந்து பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதால், அதனை சீரமைக்க கருங்கற்களாலான சிமெண்ட் தடுப்பு சுவர் செப்பனிடும் பணிகள் மேற்கொள்ள நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடம் விலைப்புள்ளி கோரியதில், வரப் பெற்ற விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் அதற்கான செலவினம் ரூ.10000/-க்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

1. திரு.இ.இளங்கோவன்
   நகராட்சி ஒப்பந்ததாரர், ஆரணி ரூ. 9900/-
2. திரு. அ.அசோக்குமார்
   நகராட்சி ஒப்பந்ததாரர், ஆரணி ரூ. 11000/-
3. திரு. எம். பழனி
   நகராட்சி ஒப்பந்ததாரர், ஆரணி ரூ. 12000/-

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்காலம். மேலும், மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியினை அங்கீகரித்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம் மேலும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.(கோப்பு எண் 765/19/இ1)

26. ஆரணி நகராட்சியில் நகரின் மையப் பகுதியில் உள்ள சூரிய குளத்திற்கு திருமலை சமுத்திர ஏரியிலிருந்து சூரியகுளத்திற்கு உபரி நீர் வரும் இடத்தில் மழைக்காலங்களில் முதலில் வரும் அசுத்தம் மற்றும் கழிவுநீர் சூரியகுளத்தில் கலக்கா வண்ணம் அருகில் உள்ள கழிவுநீர் கால்வாயில் செல்ல ஏதுவாக தடுப்புச் சுவர் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடம் விலைப்புள்ளி கோரியதில், வரப் பெற்ற விலைப்புள்ளிகள் பின்வருமாறு மேலும், அதற்கான செலவினம் ரூ.20000/-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது

1. திரு.இ.இளங்கோவன்
   நகராட்சி ஒப்பந்ததாரர், ஆரணி ரூ. 19900/-
1. திரு. எஸ். உஷாராணி,
   நகராட்சி ஒப்பந்ததாரர், ஆரணி ரூ. 21200/-
2. திரு. ஆர். கந்தன்
   நகராட்சி ஒப்பந்ததாரர், ஆரணி ரூ. 21400/-

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியினை அங்கீகரித்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
(கோப்பு எண் 765/19/இ1)

27. ஆரணி நகராட்சி வார்டு எண் 06 வடக்குமாட வீதியில் உள்ள சிமெண்ட் சாலை மிகவும் பழுதடைந்துள்ளதால் அதனை செப்பனிடும் பணிகள் மேற்கொள்ள நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடம் விலைப்புள்ளி கோரியதில், வரப் பெற்ற விலைப்புள்ளிகள் பின்வருமாறு மேலும், அதற்கான செலவினம் ரூ.30000/-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது

1. திரு.இ.இளங்கோவன்
   நகராட்சி ஒப்பந்ததாரர், ஆரணி ரூ. 29900/-
2. திரு. எஸ். உஷாராணி,
   நகராட்சி ஒப்பந்ததாரர், ஆரணி ரூ. 32000/-
3. திரு. ஆர். கந்தன்
   நகராட்சி ஒப்பந்ததாரர், ஆரணி ரூ. 31500/-

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம், மேலும், மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியினை அங்கீகரித்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம், (கோப்பு எண் 765/இ1/2019)

28. தமிழக முன்னாள் முதல்வர் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாள் 15.07.2019 வருவதால், அன்னாரின் திருஉருவச் சிலைக்கு வண்ணம் அடித்தல், மற்றும் அதனை சுற்றியுள்ள பாதுகாப்பு வேலிக்கும் வண்ணம் தீட்டி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடம் விலைப்புள்ளி கோரியதில், வரப் பெற்ற விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் அதற்கான செலவினம் ரூ.30000/-க்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

1. திரு.அ.அசோக்குமார்,
   நகராட்சி ஒப்பந்ததாரர், ஆரணி ரூ 29900/-
2. திரு. இ.இளங்கோவன்
   நகராட்சி ஒப்பந்ததாரர், ஆரணி ரூ. 31500/-
3. திரு. எம். பழனி,
   நகராட்சி ஒப்பந்ததாரர், ஆரணி ரூ. 31000/-

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியினை அங்கீகரித்து தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். மேலும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.(கோப்பு எண் 765/19/இ1)

தனிஅலுவலர்,
ஆரணி நகராட்சி